# இரண்டாம் வருகை குறித்த கதைகள்

**லில்லியன் ஸ்டான்லி**

பல கதைகள் சொல்லித்தான் சத்தியத்தை இயேசு மக்களது தலைக்குள் ஏற்றினார். "இதோ, வாசலண்டையில் வந்துவிட்டார்," என்ற சத்தம் தொனிக்கும் இவ்வேளையில், அவரது இரண்டாம் வருகை குறித்த சில கதைகளைப் படிப்போம் வாருங்கள்.

## 1. கோதுமையும் களைகளும் (மத் 13:24-30; 36-43); வலை கதையும் இதற்கு ஒப்பானதே (வச 47-50)

ஆதாமையும் ஏவாளையும் இறைவன் களங்கமற்றக் குழந்தைகளைப்போலப் படைத்தார். அவர்கள் பாவம் செய்தாலும், அவர் அளித்திருந்த ஆசிகளை ரத்து செய்யாமல் அவர்களை மன்னித்தார். அப்படியாக அவர்கள் பலுகிப் பெருகினபோது, தீயோன் அவர்கள் நடுவே களைகளை விதைக்கத் திட்டமிட்டான். காயீனது ஒத்துழைப்பினால் அது சாத்தியமாயிற்று. ஆபேலது அருமையான காணிக்கைக்கு முன்பாக, காயீனது அற்பமாகக் காணப்பட்டது (எபி 11:4). தீயோனோடு கைகோர்த்து தன் சகோதரனையே கொன்று போட்ட காயீனைப் போல நாம் இருக்கலாமா? ஏன் அப்படிச் செய்தான்? தன்னுடைய செயல்கள் கெட்டதும், தம்பியினது நல்லதுமாய் இருந்ததினால்தானே (1 யோவா 3:12). கோதுமையையும் களையையும் இங்கே காண்கிறோம். காயீனைக் குறித்து யூதாவும் நற்சாட்சி கொடுக்கவில்லை (வச 11).

வரலாற்றின் விடியலிலிருந்து பரமன் நல்ல விதைகளை விதைக்க, பொல்லான் மும்முரமாக களைகளை விதைத்து வருகிறான். இதைத்தான் நோவா மற்றும் அக்காலத்து மக்கள், யோசேப்பும் சகோதரரும், தாவீதும் சவுலும், நல்ல தீய அரசர், உண்மை பொய் இறைவாக்கினர், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர் மற்றும் நிராகரித்தவரில் காண்கிறோம். இரண்டும் ஒன்றாக வளரவே தலைவர் விரும்பினார். இதனால் தான் குடும்ப சூழலிலும், அக்கம்பக்கத்திலும், சபை களிலும், உலகெங்கும் களைகளைக் காண்கிறோம். உலக முடிவில் முதலாவது களைகள் ஈவிரக்கமின்றி பிடுங்கப்பட்டு சுட்டெரிக்கப்படும்.

எச்சரிக்கை! சாத்தான் உங்களைத் தொட விடாதீர். அவன் வஞ்சகன். உங்கள் பலவீனம் அறிந்து அங்கே தொடுவான். கோதுமையாயிருங்கள். இறுதிகால அக்கினிச் சூளைக்குத் தப்பும்படியாக விழிப்பாயிருங்கள். உங்களைச் சுற்றியுள்ள களைகள் உங்களைக் களங்கப்படுத்தாதபடி கவனமாயிருங்கள். கூடுமானால் அவர்களை அக்கினியி லிருந்து இழுத்துவிடுங்கள் (யூதா 23). அவர்களால் அசுத்தமாகிவிடாதீர்கள்.

## 2. அடையாளம் தேடுவோர்: (மத் 16:1-4; மாற் 13:28,29)

பரிசேயரும் சதுசேயரும் வானத்திலிருந்து அடையாளம் கேட்டனர். மந்திரவித்தை எதிர்பார்த்தனரா? இயேசுவால் செய்ய முடிந்தாலும் செய்யவில்லை, ஏனெனில் இவர்கள் வானத்தின் தோற்றத்தை நிதானிக்க அறிந்தவர்கள். காலத்தின் அடையாளங்கள் அவர்களைச் சுற்றிலும் இருந்தனவே. இயேசு அற்புதங்கள் செய்து இறையரசை பறைசாற்றியதை அறிந்திருந்தனர் (யோவா 11:47). யோனா இறைவாக்கினரின் அடையாளம் ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருந்தது. இயேசுவைப் போல மக்களை எச்சரிக்க வந்து, மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்து, எவ்விதப் பாதிப்புமின்றி வெளிவந்தவர். இயேசுவின் சீடர்கள் அவர் மூன்றாம் நாள் உயிர்த் தெழுவார் என்றதை மறந்துபோனாலும், இவர்கள் பிலாத்துவிடம், "அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது," என்றனர் (மத் 27:63). இருப்பினும் சேவகர் மூலமாக இயேசுவின் உயிர்த் தெழுதல் குறித்து நேரடிச் செய்தி அறிந்தும் அவரை விசுவாசிக்கவில்லை. எனவேதான் இயேசு அவர்களை மாய்மாலக்காரர் என்றார். துக்கம் என்னவென்றால், "அவர்களை விட்டுப் புறப்பட்டுப்போனார்" (16:4). அதாவது அவர்கள்மேல் கரிசனை இழந்தார். எத்தனை பயங்கரம்!

இந்த விஞ்ஞான யுகத்தில் காலநிலையைத் துல்லிய மாக அறிவிக்கக்கூடிய நாம், நம்மைச் சூழ்ந்துள்ள அடையாளங்களைக் கண்டும் காணாமலிருப்போமா? நாம் சாப்பிடுகிறோம், குடிக்கிறோம், திருமணம் செய் கிறோம், மணமுடித்துக் கொடுக்கிறோம் (மத் 24:37,38). இதையெல்லாம் நிறுத்தவேண்டுமா? நோவா எப்படி வெள்ளத்திற்குத் தப்பினார்? அவர் சாப்பிட்டார், குடித்தார், மணந்தார், பிள்ளைகளுக்கு மணமுடித்தார். ஆனால் இறைவனிடமிருந்து எச்சரிப்பு பெற்றபோது, மழையைப்

பார்க்காவிட்டாலும் விசுவாசத்தினால், பயத்தோடு தன் குடும்பத்தைக் காப்பாற்ற ஒரு படகைச் செய்தார். இந்த விசுவாச செயல்தான் அவரைச் சூழ இருந்த விசுவாசி யாதவர்களைக் குற்றஞ்சாட்டியது. நோவாவோ விசுவாசத் தினாலே நீதியுள்ளவரானார் (எபி 11:7). பக்தியற்றவர்கள் மத்தியிலிருந்து பரமன் நோவாவைக் காப்பாற்றினார் என்கிறது திருமறை. எனவே இறைப்பற்றுள்ளவர்களை சோதனையிலிருந்து காப்பாற்றி பக்தியற்றவர்களை நியாயத்தீர்ப்பின் நாளின் தண்டனைக்கு ஒதுக்கி வைக்க அவர் அறிந்திருக்கிறார். தங்கள் இச்சையின்படி நடக்கிற வர்களை விட்டுவைக்க மாட்டார் (2 பேது 2:5,9,10).

யுத்தங்கள், தேசத்திற்கு விரோதமாய் தேசம், அரசுக்கு எதிராக அரசு, பஞ்சங்கள், நோய்நொடிகள், நிலஅதிர்வுகள்! எந்தக் கிறிஸ்தவரும் கண்ணெதிரே காணப்படும் இயேசுவின் இரண்டாம் வருகையின் அடையாளங்களை மறுக்கமுடியாது. ஆயத்தமாவோம், பரிசேயரை விட்டுப் போனதுபோல நம்மையும் விட்டுப் போய்விடக்கூடாதே!

### 3. திருமண விருந்து : (மத் 22:1-14)

நாம் நன்கறிந்த இந்த உவமையில் ஒன்றை மட்டும் விவரிக்கிறேன் — துன்புறுத்தல்.

அழைக்கப்பட்ட சிலர் அரசரின் வேலைக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலை செய்தார்கள். வெளிநாட்டவர் இந்தியாவிற்கு வந்து விதைவிதைத்து செழிப்பான அறுவடையைக் கண்ட நாட்களை அறிவோம். ஆலயங்கள் எழும்பின. கிராமம் கிராமமாக மக்கள் மனம்திரும்பினர். அதன் பிறகு வெளிநாட்டு மிஷனரிகள் இந்தியாவிற்குள் வர தடை விதிக்கப்பட்டது. சமீபத்தில் வெளிநாட்டுப் பணம் இந்தியாவிற்குள் வருவது நிறுத்தப்பட்டது. அடுத்து என்ன? நாமே மிஷனரிகளாக எழும்பி நமது பணப்பையை காலி செய்ய வேண்டும். மிஷனரிப் பணிக்கும் தடைகள் விதிக்கப்பட்டன. சில மாநிலங்களில் மதமாற்றுத் தடைச்சட்டம் அமலாகி நற்செய்திப்பணிக்கு முள்ளானது. துணிந்து செயல்பட்டோர் கேள்வி கேட்கப்பட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சுறுசுறுப்பான விசுவாசிகளின் இருதயத்தை பயம் கவ்வ மிஷனரி சேவை பாதிக்கப்பட்டது.

காற்று புயலாகும்போது என்ன செய்யலாம்? ஆதி திருத்தூதுவரும் இந்நிலையைச் சந்தித்தனர். துன்புறுத்தல் ஏற்பட்டபோது அவர்கள் நற்செய்திப்பணியை நிறுத்தாமல் இயேசு போதித்த வழிமுறைகளைப் பின்பற்றி விதை விதைக்கக்கூடிய இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர் (மத் 10:23). அங்கே அபார அறுவடையைக் கண்டனர் (அப் 11:19-21). அவர்களது அர்ப்பணம்தான் என்னே! நிம்மதியான இந்த வாழ்க்கையை நாடோடி வாழ்க்கைக்கு மாற்றிக்கொள்ள ஆகுமா? நமது முன்னுரிமைகள் மாறிவிட்டதால் இதை நம்மால் சிந்தித்துப் பார்க்கவும் முடியாது. மாற மனமின்றி வசதி வாழ்வை அணைத்துக் கொண்டு, நமக்கு ஏன் வம்பு என்று வாயை மூடிக் கொள்கிறோம். “ஆத்தும ஆதாயம் செய்கிறீர்களா?” என்று நான் சிலரை வினவும்போது அவர்கள் பதிலை ஒத்துக்கொள்ள முடிவதில்லை. “அதெல்லாம் இப்ப முடியாது” என்கின்றனர். ஏன் என்று கேட்கிறேன். எனக்கு எப்போதும் ஆத்தும ஆதாய சமயந்தான்; எந்த இடமும் செழிப்பான இடம்தான். கிறிஸ்தவரை சந்தித்தால் ஆத்தும ஆதாயம் செய்ய ஊக்குவிக்கிறேன். நற்செய்தி அறிவிக்க பராபரன் குஷ்டரோகிகளைத் தெரிந்தெடுத்தது என்ன அதிசயம்! (2 இரா 7:9). புறவினத்தவர் மத்தியில் வாழ்ந்த தானியேல், மொர்தெகாய் போன்றவர்கள் துன்புறுத் தல்கள் இருந்தாலும் நற்செய்தியைக் கடத்தினர். காட்டிலேயே வாழும் முனிவனுக்கு கல்லும் முள்ளும் பழகிப்போனவை. கடலிலேயே வாழும் மீன்கள் கடலின் ஆழத்தைப் பற்றி கவலைப்படவா போகின்றன? நற் செய்தியை பரப்பத்தான் சர்வவல்லவர் துன்புறுத்துதலைப் பயன்படுத்தினார். சத்துரு அவர்களைச் சிதறடித்துப் பாழாக்கத் தீர்மானித்தான்; கிறிஸ்துவோ அவர்களைச் சிதறடித்துப் பயன்படுத்தத் திட்டமிட்டார்.

### 4. ஞானமும் விழிப்பும் : (மத் 25:1-13)

பத்துக் கன்னியர் கதை ஞானத்தில் துவங்கி விழித் திருத்தலில் முடிகிறது. நாம் ஞானமாகவும் விழிப்பாகவும் இராவிடில் இரண்டாம் வருகையில் விடுபட்டுப் போவோம். கன்னியரைக் குறிப்பிட்டுப் பேசுவதால் இயேசு வாலிபரை மனதில் கொண்டு பேசியிருக்கலாம்.

இன்று வாலிபர் ஞானத்தைத் தேடி வெறுமையான அறிவைப் பெறுகின்றனர். அறிவு என்பது படித்து வரும் புரிதல். ஞானம் என்பது ஞானக்கன்மலை அருளும் மனத்தெளிவு. அறிவை நாடி ஓடி பலர் ஞானத்தைக் கோட்டை விட்டுவிடுகின்றனர். இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்பட அறிவு போதாது, ஞானம் வேண்டும். எப்படி? முட்டாள் கன்னியருக்கு மணவாளனின் வருகை குறித்து எல்லாம் தெரியும். அந்நாட்களின் ஒழுங்கின்படி மணவாளனை வரவேற்க ஆயத்தமாயினர். ஆனால் கூடுதல் எண்ணெய் கொண்டுபோகவேண்டுமென்ற

சட்டம் கிடையாது. மற்ற ஐவரோ அறிவோடுகூட தெய்வீக ஞானத்தினால் கூடுதல் எடுத்துச் சென்றனர். பரம ஞானத்திற்காய் ஜெபியுங்கள்.

காட்சியைக் கற்பனை செய்யுங்கள். மான்குட்டிகள் போல துள்ளிக்கொண்டும், விளையாடிக்கொண்டும் கலியாண வீடு செல்ல ஆயத்தமாகின்றனர். ‘‘ஐய, தோளில் என்ன தொங்குது? எண்ணெயா? அது எதுக்கு? உன்னைப் பார்க்கவே சகிக்கலை’’ என்கிறாள் சிநேகிதி. ஆம், இன்றைய சில வாலிபருக்கு, பட்டாம்பூச்சி வாழ்க்கையில் வேத வாசிப்பும் ஜெபமும் ஆலயமும் ஊழியமும் பாரமாகத்தான் தெரிகிறது. ஞானமுள்ள வாலிபரோ வாழ்க்கையில் தேவையற்றவைகளைக் களைந்து அத்தியாவசியமானவைகளை அணைத்துக் கொள்கின்றனர். துக்ககரமாக புத்தியற்றவர் பதினோராம் மணி நேரத்தில் மாட்டிக்கொண்டனர். கட்டிக் கொடுத்த சோறும், சொல்லிக் கொடுத்த புத்தியும் எவ்வளவு நாட்களுக்கு வரும்? ‘‘எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்’’ (1 பேது 4:7).

பிசாசு தங்களை ஆரிரோ தாலாட்டி கடவுளை விட்டு தூரக் கொண்டுச் சென்றுவிடாதபடி இளைஞர் கவனமாயிருக்க வேண்டும். ஒவ்வொரு நொடியும் விழிப்பாயிருங்கள். கேள்விக்குறியானவை வாழ்வில் ஏதேனும் உண்டோ என ஆராய்ந்து அதை வெட்டி எறியுங்கள். முழு மனிதனாய் நரகிற்குச் செல்வதைவிட கையோ, காலோ, கண்ணோ இன்றி மோட்சம் செல்வது மேல் (மத் 5:29,30).

## 5. வேலையில் உத்தமம் : (மத் 24:45-51)

வேலைக்காரனிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுத் தலைவர் வெளியே செல்கிறார். தன் சக ஊழியரை கவனிப்பதே அவன் வேலை. எப்போது திரும்புவார் என்று தலைவர் சொல்லவில்லை. எனவே, ‘‘உடனடியாகக்’’ கதவைத் திறக்கும்படி அவன் விழிப்பாயிருக்க வேண்டும் (லூக் 12:36). தலைவரை வரவேற்க அவன் விழிப்புடன் காத்திருந்தால் அவனுக்கு ராஜ உபசரணை கிடைக்கும் (வச 37). அவனோ சாப்பிட்டு, குடித்து, வெறித்தனமாய் பிற ஊழியரை துன்புறுத்துவானானால் தலைவர் திடீரென்று வரும்போது கையும் மெய்யுமாய் பிடிபட்டு நித்திய தண்டனை பெறுவான்.

விழிப்பாயிருந்த பல சத்தியவான்கள், உத்தமபுத்திரர் இன்று அசந்துவிட்டது எத்தனை துக்கம். வெளிப்படையாக ஒன்றும் தெரியாவிட்டாலும் உள்ளே கரையான் அரித்துக் கொண்டிருக்கிறதே. நல்லவர்கள்தான். ஆனால் ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷமிருந்தால் பாலின் பயனென்ன? இதனால் இறைப்பணி பாதிக்கப்படுகிறது. இறைவன் காணாதவர் போலில்லை. அந்த நாளிலே கழுத்தை இறுக்கிப் பிடிப்பார். கானானியப் பெண்ணை யூதா மணந்தார். அங்கு இறைவார்த்தை ஒன்றும் சொல்லா விட்டாலும் பல்லாண்டுகளுக்குப் பிறகு இறைவனது இதயக்குமுறல் இறைவாக்கினர் வாய்மொழியாய் ஊற்றப்படுகிறது (ஆதி 38:2; மல் 2:11).

உண்மை என்பது நம்பகம். தான் நம்பி ஒப்படைத்து சென்ற வேலையை, தான் திரும்பி வரும்போது உத்தமமாய் செய்துகொண்டிருக்க தலைவன் எதிர்பார்த்தார். இவர்களோ தங்கள் பாவங்களுக்கு அழகிய பெயர் சூட்டுகிறார்கள். இவர்கள் மனச்சாட்சியில் சூடுண்டவர்கள் (1 தீமோ 4:1). அதாவது மனச்சாட்சி அற்றவர்கள். நன்றாகத்தான் இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் மாட்டிக்கொள்வார்கள். ஆத்துமாதாயகர் நரகம் செல்வதை கற்பனை செய்யமுடிகிறதா? (மத் 23:15). இயேசு தன் ஆடுகளை அறிந்திருப்பதாகச் சொன்னார் (யோவா 10:14). ‘‘உங்களை அறியேன்,’’ என்று சொல்லிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

மக்கள் கடவுளை நேசிக்கிறார்கள். ஆனால் அவருக்கு பயப்படுகிறவர்களோ சொற்பம். கடவுள் உங்களை நம்பிக் கொடுத்தப் பொறுப்பில் அசதியாயிராதீர்கள். ‘‘சகோதரரே, அந்த நாள் திருடனைப் போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக நீங்கள்அந்தாரத்திலிருக்கிறவர்கள் அல்லவே’’ (1 தெச 5:4). ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பொறுப்புண்டு. வாலிபர் நன்றாகப் படித்து, வீட்டு வேலைகளைக் கருத்துடன் செய்யவேண்டும். மனைவியர் நற்காரியங்களைச் செய்வதிலும், பிள்ளைகளைப் பேணி வளர்ப்பதிலும், அந்நியரையும் ஊழியரையும் உபசரிப்பதிலும் கவனமாயிருக்க வேண்டும் (1 தீமோ 5:10). கணவனே கண்கண்ட தெய்வம் என்ற நிலை மாறி வேலையே தெய்வமாகிவிடக்கூடாது. ஆண்கள் குடும்பத் தலைவராய் மனைவியைப் பிள்ளைகளைக் கருத்தாய்ப் பராமரிக்க வேண்டும். தலைவர் திடீரென்று வந்தால் மனைவி, பிள்ளைகள் மற்றும் உடன் ஊழியரைத் துன்புறுத்துகிறவராகப் பிடிபடுவீர்களா?

## 6. தாலந்துகளைப் பயன்படுத்துதல் : (மத் 25:14-30)

அருமை இளைஞரே, எனக்குத் தாலந்து எதுவும்

இல்லை என்று சொல்லி கதையில் வரும் அம்மனிதனைப் போல கடவுளிடம் ஆங்காரமாய் பேசாதீர்கள். உங்கள் தாலந்தைக் கண்டுபிடியுங்கள். வெட்கத்தினாலோ, சோம் பேறித்தனத்தினாலோ அதை நீங்கள் பயன்படுத்தாமல் இருக்கலாம். தேவையற்றப் பொழுதுபோக்குகள் பொன்னான நேரத்தைப் பாழாக்கும். தெருவில் சுற்றிக் கொண்டும், ஹோட்டல்களில் உட்கார்ந்து கொண்டும் காலத்தைப் போக்கடிக்கும் வாலிபரைக் காண்கிறேன். தலைவர் வரும்போது அவருக்கு என்னத்தைத் திருப்பிக் கொடுப்பார்கள்? உழைத்துப் பெற வேண்டியப் பதவிகளை உட்கார்ந்துப் பெற முயலுகிறார்கள்.

நம்பிக்கையின்மையே பெரிய விரோதி. சித்திரை மாதத்து ஓடையைப் போல நம்பிக்கை வற்றிப்போய் விட்டதா? உங்கள் குறிக்கோளை அடைவதற்கு, இருக்கும் இடத்தை விட்டு நகரவேண்டும். போனது போகட்டும்; திரும்பிப் பார்க்காதீர்கள். முன்நோக்கிச் செல்லுங்கள். சக்தியை அடுத்த வேலையில் ஊற்றாமல் கடந்த தோல்வியையே நினைத்து நினைத்து நேரத்தை வீணாக்காதீர்கள். உற்சாகமாகக் காலெடுத்து வைத்தால், கையிட்டுச் செய்யும் பணி கனி தரும். நம்பிக்கையோடு முன்னேற வேண்டும். யோசனை நல்லதுதான்; அதை செயல்படுத்துவதுதான் கடினம். அந்த யோசனைதான் தாலந்து. அதை செயல்படுத்துங்கள். வெற்றி வேண்டுமா? தலையில் கைவைத்து உட்கார்ந்திருக்கும் நிலை மாற வேண்டுமா? விடாமுயற்சி என்ற சாவி கதவுகளைத் திறந்து, எட்ட முடியாது என்று நீங்கள் நினைத்த இலக்கையும் எட்டச் செய்து உங்கள் வாழ்வை மலரச் செய்யும்.

அந்த ஒரு — தாலந்து மனிதன் பொல்லாதவனும் சோம்பேறியும் தலைவனிடம் மரியாதையின்றி அவரைக் கடினமானவர் என்று குற்றஞ்சாட்டுகிறவனுமாயிருந்தான். நீங்கள் கடவுளுடைய சொந்த வேலைக்காரர் என்பதை முதலாவது புரிந்துகொள்ளுங்கள் (மத் 25:14). அவர் உங்களை சொந்தங் கொண்டாடி கனப்படுத்தி மகிழ் வாழ்வை அளிக்க விரும்புகிறார். "ஆவல் ஒன்றையும் மாற்றாது, தீர்மானம் சிலவற்றை மாற்றும்; உறுதி அனைத்தையும் மாற்றிவிடும்," என்பது பழமொழி.

கொஞ்சம் முயற்சி எடுத்தால் உங்களுக்குக் கிடைப்பதைப் பாருங்கள் — கூடுதல், பரிபூரண ஆசி! (மத் 25:29). உண்மையும் உத்தமமுமுள்ள ஊழியனாய் எண்ணப்பட்டு அனேகத்தின்மேல் அதிகாரியாகி தலைவனது சந்தோஷத் தையும் அனுபவிப்பீர்கள் (வச 21-23).

## 7. ஈகையும் நற்கிரியைகளும் : (மத் 25:31-46)

உலகம் முழுவதையும் மஹாராஜா இரண்டாகப் பிரிக்கிறார் — செம்மறியாடுகள், வெள்ளாடுகள். செம்மறியாடுகள் மந்தையாக இருப்பவை. மேய்ப்பன் பின்செல்பவை. அநேகமாக கொம்புகள் இருக்காது. பழகக்கூடியவை. பல காலநிலைகளையும் சமாளிப்பவை. செம்மறியாடுகள் சுயாதீனமானவை. அடக்கக் கடினமானவை. கொம்புகள் கொண்ட இவை பாதுகாவலான இடங்களைத் தேடும்.

செம்மறியாடுகளை அரசர் கனிவுடனும், வெள்ளாடு களை கடினமாகவும் நடத்தியதன் காரணம் இப்போது புரிகிறதா? உலக மக்களை, மற்றவர்களுக்குக் கரிசனை காட்டும் மென்மையானவர் மற்றும் கடுமையான தாந்தின்னிப் பறவைகள் என்றும் சுலபமாகப் பிரித்து விடலாம். தேவையிலிருப்போருக்காகக் கவலைப்படும் மேய்ப்பன் பின்செல்லும் செம்மறிகளா நாம் அல்லது கொம்புள்ள வெள்ளாட்டு இனமா?

நாம் பேராசையுள்ள வெள்ளாடுகளாக வீட்டோடு வீட்டைக் கட்டி வயலோடு வயலை வாங்குகிறவர் களானால், ஏசாயா சொல்கிறார், குடியிருப்போர் இல்லாமல் அந்த வீடுகள் காலியாகக் கிடக்குமாம் (ஏசா 5:8,9). நாம் நினைப்பதெல்லாம் கிடைக்கும் என்ற நிலை வரும்போது வேண்டியதை மட்டும் நினைப்போம் என்ற புத்தி வருகிறதா? யோசியாவின் மகனாகிய அரசன் சல்லூமிடம் ஆண்டவர் சொன்னது: நீதியாய் நடந்து கொண்ட உன் அப்பா நன்றாக இருந்தாரே. ஏழைகளுக்கும் நசுக்கப்பட்ட வருக்கும் கைகொடுத்தாரே. அரண்மனையில் வாழ்வதனால் நீ அரசனாகிவிட முடியாது (எரே 22:15,16). வாய்க்கும் வயிற்றுக்குமாக வாழும் மக்களில் நாம் கடவுளை மாறுவேடத்தில் அனுதினமும் காண்கிறோம்.

பதறிப்போன நேபுகாத்நேச்சாருக்கு தானியேலின் ஆலோசனை: பாவத்தை விட்டு நீதியாய் நடந்து கொள்ளும்; துன்மார்க்கத்தை ஒதுக்கி ஏழைகளுக்கு இரங்கும் (தானி 4:27). ஆலோசனையைக் கேளாத நேபுகாத் நேச்சார் மிருகமானான். வீரம் இருக்கும் இடத்தில் ஈரமும் இருக்கவேண்டும். ஆதித்திருச்சபையின் ஒரு முக்கியக் கரிசனை, ஏழைகளையும் விதவைகளையும் கவனிப்பது (அப் 6:1; கலா 2:10). பிச்சைக்காரன் லாசருவைச் சட்டை செய்யாத பணக்காரன் நரகத்தில் வீழ்ந்தானே.

சொத்து, சுதந்திரம் இருந்தால்தான் கொடுக்கமுடியும் என்பதல்ல. கொடுக்கும் வாஞ்சைதான் முக்கியம்.

தண்ணீரை திராட்சைரசமாய் மாற்றிய இறைவன், இரக்கமற்ற வெள்ளாடாகிய உங்களை இரக்க உள்ளம் கொண்ட செம்மறியாக மாற்றலாமே. அந்த பயங்கரமான நாளில் வலது பக்கமாக அனுப்பி வைக்கப்படும்படி முழங்காலிடுங்கள். இக்கதையில் இறைப்பற்று குறித்துப் பேசப்படவில்லை, இரக்கத்தைப் பற்றியே பேசப்படுகிறது என்பதை கவனிக்க.

அறைகூவல் வந்துவிட்டது. சிகப்பு விளக்குகள் ஒளிர்கின்றன. திருமறை கூறும் எச்சரிக்கைகள் செவிடன் காதில் ஊதின சங்காகிவிடக்கூடாது. நியாயத்தீர்ப்பு நாளில் நமது வாழ்க்கை குறித்து கணக்கொப்புவிக்க அழைக்கப்படுவோம். என்னுடையத் தெரிந்தெடுப்புகள், தீர்மானங்களுக்கு நானே பொறுப்பெடுக்க வேண்டும். ஆண்டவரது மகிழ்ச்சிக்குள் நுழையும்படியாக நமது இதயங்களை ஆராய்ந்து வழிகளை சீர்ப்படுத்துவோம். அழிவுக்கு இழுத்துச் செல்லக்கூடிய களைகளைக் குறித்து கவனம். அடையாளங்களைத் தேடி அசால்டாக இருந்து விட வேண்டாம். துன்புறுத்தல்களை தைரியமாய்ச் சந்தியுங்கள். கண்களைத் தேய்த்துக் கொண்டு விழித்திருங்கள். வேலையில் கவலையீனமின்றி கருத்தாயிருங்கள். உங்கள் தாலந்து சம்பாதித்த லாபத்தை வாங்கத் தலைவர் வருகிறார். இரக்க சிந்தையை வளர்த்துக் கொள்ளுங்கள். அப்படியானால் இருகரம் நீட்டி, “வாரும் என் ஆண்டவா!” என்று மகிழ்வோடு நம் அரசரை வரவேற்கலாம்!